விலை ஒரு அணு

REGD. M 4642

# திராவிடநாடு

மலர் 7 | 29—8—48 | இதழ் 11

# பாலபாடம் அறியாத பக்தவத்சலம்

தமிழ் வேறு—ஆரியம் வேறு, தமிழ்க்கலை வேறு—ஆரியக்கலை வேறு. இது வரலாறு கற்பிக்கும் பாடம். ஆரியக்கலையில் அளவுக்கு மீறிய பற்றுக்கொண்டவர்கள்கூடத், தமிழ்க்கலை, ஆரியக்கலைக்கு முற்றிலும் புறம்பான தனிச் சிறப்புடையது என்பதை மறுக்க முடியாது.

ஆனல், தமிழ்மக்களிற் சிலர் தங்களுடைய கலப்பில்லாத கலை நலத்தையும், குற்றமில்லாத மொழி வளத்தையும், நிகரில்லாத இலக்கியச்சிறப்பையும் மறந்து, ஆரியத்துக்கு அடிமை பட்டாயினும், கிடைத்த பதவியைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்பதும், அதற்காகத் தங்கள் மரபியல்புகளையும் பண்பாடுகளையும் பெற்ற பதவிக்கு விலையாகக் கொடுப்பதும் உண்மையிலேயே வருந்தக்கூடியதுமட்டுமல்ல, இத்தகைய சிலரின் இந்தப் போக்கைக் கண்டு வெட்கித் தலைகுனியவேண்டியும் இருக்கிறது.

வடக்கே, தாகூர்களும், போஸ்களும் தோன்றி உலக அரங்கத்தில் தங்கள் பேராற்றலால் தாம் பிறந்த வங்காள நாட்டுக்கு வளமும் உயர்வும் உண்டாக்குவதையே தங்கள் கடமையாகக் கருதிப் பணியாற்றினர்.

நேருக்களும், பட்டேல்களும் இந்துஸ்தானத்துக்கு எழில் விளைவிக்கின்றனர்.

ஆனல், பக்தவத்சலங்களும், அவினாசிகளும் இங்கே என்ன செய்கின்றனர்?

"சமஸ்கிருதம் நமது புராதன மொழி. தென்னாட்டுக்கெனத்தனியான ஒரு கலை கிடையாது. இந்தியா முழுவதுக்கும் கலாச்சாரம் ஒன்றேயன்றி, வெவ்வேறு கலாச்சாரங்கள் கிடையாது"

என்று கூறுகின்றனர். எங்கிருந்து கொண்டு கூறுகின்றனர்? பண்ணையிலும், பருத்திக்காட்டிலும், பரமாம்சரின் ஆசிரமத்திலும் இருந்து கொண்டா இவ்விதம் கூறுகின்றனர். இல்லை, இல்லை! பொறுப்புள்ள பதவிகளில் இருந்துகொண்டு — தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் நன்மை செய்யவே தாங்கள் பதவியில் இருப்பதாகக் கூறிக்கொண்டுதான் இவ்விதம் சொல்லுகின்றனர்.

ஆனல், வடநாட்டவரோ, நெடுங்காலம் வரையில் வடமொழியிலுள்ள சாதாரண கலைப் பகுதிகளுக்குக்கூடவேண்டிய தொண்டினைப் புரிந்து வந்தனர். அவர்களுடைய நாட்டுச் சமயமும் அரசியலும் அத்தொண்டிலேயே அவர்களை மேலும் மேலும் உழைக்கத் தூண்டினவேயன்றி, வாளா சோம்பிக் கிடக்க விடவில்லை. சிலகாலத்திற்குள் தன்னலமற்ற பலர் தோன்றி எழுப்பிய உணர்ச்சியால், தம்மை உணர்ந்து, தமக்கே உரிய, தம் மொழி வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் ஏற்ற உழைப்பினை மேற்கொண்டு மிக்க விரைவுடன் இலக்கியப் பெருஞ் செல்வங்கள் பல உண்டாக்கிச், சமஸ்கிருத மொழிக்கும் கலைக்கும் ஏற்றம் தேடுவாராயினர்.

இங்கு! நம் நாட்டவரோ, ஒரு வரை - முறை - துறையின்றி அவ்வடநாட்டவர் மொழி, கலை, நாகரிகம் முதலியவற்றில் நுழைந்து, அவற்றின் வெறிகொண்டு, இக்கால இக்கீழ்நிலைக்குக் காரணமாகிய இழி செயல்களையே மேலும் மேலும் செய்தவண்ணமிருக்கின்றனர்.

இவர்களின் இப்போக்கை நோக்கும்போது, இவர்களும் ஆரியர்களின் வழிவந்த கூட்டமோ என்ற ஐயப்பாடு நமக்கு உண்டாகின்றது! இப்போது தமிழில் காணப்படும் யாவும் சமஸ்கிருதத்தில் இருந்துதான் வந்தன என்று, வாய் கூசாது கூறும் சில கோடரிக் காம்புகளின் கோணல் சேட்டைக்கு அரண் செய்யும் முறையிலேயே, 'சமஸ்கிருதம் நமது புராதன மொழி' என்றும் அதனை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கரைகிறார் மராமத்திலாக்கா மந்திரியார்.

இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுகத், தமிழ் மகனாகிய ஒருவருக்குத் தன்னுடைய தமிழ்க்கலையை அறியவும், அதன் உயர்வை உணரவும் வேண்டுமென்ற பண்பும் பகுத்தறிவும் இல்லாமையாகிய இரங்கத்தக்க நிலை மிக மிகப் படிந்து கிடப்பதைக் கண்டு நாம் வியப்படைவதா! வெட்கப்படுவதா?

ஆரியக்கலையாலும், அவர்களின் நுழைவாலும், தமிழ்மக்கள் அனைவரும் ஒரே இனம் என்பது மாறி, அவர்கள் ஒருவரோடொருவர் கலந்துவிடாதபடி ஒவ்வொருவரும் [illegible]

பட்டு—ஒரு தமிழனை இன்னொரு தமிழன் கண்டால், இவன் எனக்கு புறம்பானவன் என்று கருதக்கூடிய ஏற்பாடுகள் உண்டாக்கப்பட்டுத் தமிழ் மக்களின் ஒருமை நிலைக்குக் கேடு கேடப்படப்பட்டதென்ற உண்மையினைக் கூட உணரமுடியாதவர்கள்தான் இன்று நாட்டை ஆளும் தலைவர்களாய் உள்ளனர்.

தமிழ்நாட்டில் வந்து வாழும் ஆரியப் பார்ப்பனர் கூடத் தமது ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்தைக் கைவிட்டுத் தமிழ் மொழியையே தாய்மொழியாகக் கொண்டு வழங்கி வருகின்றனர். என்றபோதிலும், அவர்கள் தமக்குத் தாய்மொழி தமிழ்மொழியன்று என்று கருதுவதும், வழக்கிழந்து இறந்தொழிந்த சமஸ்கிருத மொழிக்குத் தாங்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதும் அவர்களிடத்தில் நன்றாய்க் காணப்படுகின்றன. ஆனால், தோழர் பக்தவத்சலம் போன்ற 'தமிழ் மக்கள்' சிலர், தங்கள் தாய்மொழி தமிழே—அதுவே நமது பழமையான மொழி என்று கூடக் கூறக் கூச்சப்படுவதுமன்றிச், 'சமஸ்கிருதமே நமது புராதனமொழி' என்று கூறித் தங்களுக்கிருக்கும் புல்லறிவைப் புலப்படுத்துகின்றனர்.

இத்தகைய புல்லறிவாளர்கள் தமிழ் நாட்டில் இன்று மட்டும் புதிதாகத் தோன்றியுள்ளனர் என்று கருதவேண்டாம். சற்றேறக்குறைய ஆயிரமாண்டுகளாகவே, தமிழ்க்கலையின் வரலாற்றுள் சிறந்து நிற்கும் தொல்காப்பியம் திருக்குறள் போன்ற தனித் தமிழ் நூல்கள், இடையில் வந்த ஆரியர்களாலும், ஆரியவலைப்பட்ட தமிழர்களாலும் பல வகையில் கெடுக்கப்பட்டிருக்கின்றன.

அவர்கள் இவற்றைப் பல வகையில் அலங்கோலப்படுத்தி, பச்சைப் பொய்யுரைகள் வகுத்துத், தமிழ் மக்களின் தூய கலையும் நாகரிகமும் விளக்கமாகாதபடி கெடுத்தும் விட்டனர்.

தொல்காப்பியத்தின் ஒவ்வொரு சூத்திரமும், திருக்குறளின் ஒவ்வொரு பாட்டும் 'சீரிய' ஆரிய நூற் கருத்தென்றும், கொள்கையென்றும் சிறிதும் மனங்கோணாது—நாக் கூசாது கூறினர்.

நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்களின் அறிவெல்லாம் தமிழ்க் கலையையும் தமிழர் நாகரிகத்தையும் படுகொலைசெய்வதற்கே பயன்படுத்தப்பட்டதென்பதை எவர் அறியார்!

இவர், தொல்காப்பியத்துக்கும், திருக்குறளுக்கும் விரித்த உரைகளெல்லாம், ஆரியக் கலையின் துணையின்றித், தமிழ்க்கலை தனிப்பட ஒன்று இல்லையெனப் பின்வருவோர் எண்ணக்கூடிய முறையில் செய்துள்ள வஞ்சகமே தமிழ் மக்கள் மனதில் தீராத வேதனையை உண்டுபண்ணிவிட்ட நிலையில், வெந்த புண்ணில் வேல் எறிவதுபோல், "சமஸ்கிருதமே நமது புராதன மொழி" என்று, தொல்காப்பியத்தையோ, திருக்குறளையோ புரட்டிக் கூடப் பார்த்திராத பக்தவத்சலம் அவர்கள், பதவி ஆணவம் ஒன்றையே துணைக்கொண்டு—இருக்கின்ற சிறிதளவு அறிவையும் ஆரியத்துக்கு அடமானமாக்கிவிட்டுக் கூறுகின்றாரே என்பதை எண்ணும்போதுதான், தமிழ்நாடும் அதன் கலை—நாகரிகங்களும் தகர்க்கப்படுவதன் உண்மைக் காரணங்கள் புலனாகின்றன.

எனவேதான், தமிழறிவு செறிந்த தமிழ்மக்கள் இனியும் வாளா இராது, தங்கள் கலையையும் நாகரிகத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை, எந்த விதமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் ஏற்றுப் பணியாற்றுவதையே தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டுமென்ற நிலைக்கு வந்துவிட்டனர் என்பதை, வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் கலாச்சாரம் ஒன்று தான் என்று உணர்வு கலங்கி—உண்மையை மறந்து உளறுவோர் இனியாவது உணரவேண்டுமென்று விரும்புகிறோம்.

இனிப், பிறமொழியினர் நம்மைப் பார்க்கும் பார்வை, தற்காலத்து இயற்கை நலமும் கலையழகும் குன்றி நிற்கும் ஒவ்வொரு தமிழனுடைய மனமும் ஆறாப்புண்ணால் அவதியுறச் செய்கின்றது. அதோடு, வடநாட்டுக் கலையின் கலப்பால், தமிழ்நாட்டுக்கலை வலிஇழந்து மெலிந்துபோகுமோ என்று ஒவ்வொரு தமிழனுடைய மனமும் உடலும் பதைத்துக்கொண்டிருக்கிறது.

தான் பிறந்த நாட்டில் ஒரு தமிழன் இன்னும் 'பறையனா'கவே இருக்கிறான். அவனுடைய பெருமை அழிந்துவிட்டது. சமூக நிலையில் அவன் நிற்பதற்கு ஓர் இடம் இல்லை. தன்நிலை இன்னும் தாழ்வடையாது காத்தற்குரிய தகுதியும் பறிக்கப்பட்டு விட்டது.

தோழர் பக்தவத்சலம் அவர்களிருக்கும் இன்றைய மந்திரிசபையில், 'பறையன்' கோயிலுக்குள் போகலாம் என்றசட்டம் இருக்கிறது. ஆனால், பக்தவத்சலத்தின் பண்ணையில் வேலைசெய்யும் ஒரு தமிழனை அவர் பறையனாகவே கருதி அவனைப் பர்லாங்கு தொலைவில் நிற்க வைத்தே அவனுடன் பேசுகிறார்.

'பறையன்' என்று கருதி ஒதுக்கப்பட்ட ஒரு தமிழனுடைய எண்ணமெல்லாம், 'உயர்ந்தவர்' என்று சொல்லப்படுகின்ற ஒரு திறத்தாருக்கு அடிமைப்பட்டு உழைத்து ஊழியம் செய்வதற்கும், அவர்கள் வீதியைத் துப்புரவு செய்வதற்கும், அவர்களால் அடிமையைப்போல் அவதிப்படுத்தப் படுவதற்குமே அமைந்து கிடக்கின்றது. இந்த நிலை எதனால்—எப்படி—எந்தக் காலத்தில்—யாரால்—எதற்காக ஏற்படுத்தப்பட்டதென்பதை உணரும் அறிவு அமைச்சருக்கு இல்லாவிட்டாலும், வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் கலாச்சாரம் ஒன்றுதான் என்பதை மட்டும் உணர்ந்திருக்கிறாரே என்பதைத் தன்மானமுடைய எவ்வுயிரேனும் கேள்விப்படுமாயின், நாணித் தலை குனியாமல் இருக்க முடியுமா?

தமிழ் மக்களில் உயர்ந்தோர் எனக் கருதும் தமிழ்மக்கள், ஆரியர் வகுத்த சாதி முறை நான்கனுள் கீழ்ப்பட்ட சாதியாகிய சூத்திர சாதியுள், சற்சூத்திரர்களாகவாவது தங்களை மதிக்குமாறு செய்து கொள்ள விரும்புகின்றனரேயன்றி, நாம் ஏன்—எதனால்—யாரால் சூத்திரராக்கப்பட்டோம் என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. இங்ஙனம் எண்ணிப் பாராதது மட்டுமல்ல, தமிழனுடைய மொழி, கலை, இலக்கியம், சமூக வாழ்வு என்ற அனைத்தும் ஆரியர்களின் உதவியால்தான் நிலைபெற்று நிற்கின்றன என்று நன்றாய்க் கற்பிக்கப்பட்டும் விட்டனர்.

இவ்வாறு தமிழனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாய் வந்திருக்கும் நிலையை மாற்றவே தன் மதிப்பியக்கம் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாகவே பணியாற்றிவருகின்றது.

வடமொழிக் கலையாகிய கெட்ட உணவை உட்கொண்டதால் ஏற்பட்ட இக்கொதிப்பினை முதலில் தணித்து, கலப்புமொழிக்கலையாகிய நஞ்சைப் போக்கவேண்டுமென்பதே தன்மதிப்பியக்கத்தின் குறிக்கோளாகும்.

தன்மதிப்பியக்கமே, கண்டோர், கேட்டோர், வியக்கும் விதமாகத் தோன்றி வளர்ந்து வருகிறது. இவ்வளவு முற்போக்கான ஒரு இயக்கம் தமிழ்நாட்டில் தோன்றுமென இருபதாண்டுகளுக்குமுன் எவருமே எண்ணியிருக்கமாட்டார்கள். இந்தஇயக்கத்தை எப்படியாவது ஒழித்துக் கட்டிவிடவேண்டுமென்பதும், தமிழ் மக்களின் மொழி, கலை, நாகரிகங்களை அழித்துவிடவேண்டுமென்பதுமே இன்றைய அரசியலாரின் குறிக்கோளாக இருக்கிறது.

நமது இயக்கம் எழுப்பிய கேள்விகளுக்குப்பதில் கூறமுடியாதுதிகைத்தனர் பலர். ஏசினர்—ஏளனஞ்செய்தனர் சிலர். ஆனால், ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்தனர். எதிரிகள் கலங்கிவிட்டனர். நமது கொள்கைகளில் பலவற்றை ஏற்றுக்கொள்ள நான்முந்தி, நீ முந்தி எனப்பலர் ஓடி வந்தனர். பணபலமின்றி — செல்வாக்கின்றி, ஒரு இயக்கம், எதிரிகளின் கொட்டத்தையும், குறும்புக்காரர்களின் ஆர்ப்பாட்டத்தையும், முதலாளிகளின் எதிர்ப்பையும், கங்காணிகளின் இறுக்கையும், வைதீகர்களின் வாய்ப்பூட்டையும் சமாளித்துச் சிலகாலத்துக்குள்ளாகவே சரித்திரத்திலும் சமுதாயத்திலும் மதிப்பான ஒரு இடத்தைப் பெற்றுவிட்டதென்றால், அதனை ஒடுக்கி, முதலாளித்வச் செருக்கையும், வைதிகக்கொடுமையையும், வர்ணாசிரம வஞ்சகத்தையும் ஆரியக்கலையின் அழிவுவேலையையும் தமிழ்நாட்டில் நிலைபெறச் செய்யும் போக்கிலேயே இன்றைய அரசாங்கம் காரியங்களைச் செய்துவருகின்றதென்பதையும் நாம் அறிவோம்.

பழங்குடி மக்களான திராவிடர்கள், நாகரிகத்தில்—மொழியில்—அரசியலில்—சமுதாயத் துறையில்—கலையில் வடநாட்டுக்கு முற்றிலும் புறம்பான தனிச்சிறப்போடு கூடிய உச்சநிலையில் இருந்தனர். இவ்வளவு உச்சநிலையில் இருந்து வந்த நாம், ஆரியரின் சேர்க்கைக்குப் பிறகு நடைப்பிணங்களாக மாறினோம், ஆரியக்கலை, தமிழ்க்கலையைத் தனித்து நிற்கமுடியாதபடி செய்து விடுமோ என்று அஞ்சுமளவுக்கு அதனை இங்கு பரப்புமுயன்றனர். அதற்கு உடந்தையாக அன்றும் பல பக்தவத்சலங்களும், அவினாசிகளும் இருந்தனர். இவர்களுக்குத் துணையாகப் பல காமராசர்களும், சர்தார் வேதரத்தினங்களும் அன்றும் இருந்தனர்.

அன்று, ஆரிய மொழியாலும், ஆரியக் கலையாலும் வைதிகம் என்ற போர்வை போர்த்துத் தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்குரிய இடமும், தமிழ்க் கலைக் குரிய நிலையும் தளரச் செய்தது போதாதென்று, இன்று, எதிர்பாராத ஒரு புதிய பகையைத் தேசியப் போர்வை போர்த்துக் கொண்டுவந்துள்ளனர். இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய பகை, கட்டாய இந்தி என்ற நச்சநீரோடு மட்டு நிற்கவில்லை. அதனுள் ஆரியக்கலை என்னும் நஞ்சே மிகுதியாகக் கலக்கப் பட்டிருக்கிறது. அதனாலேயே தோழர் பக்தவச்சலம் போன்ற தமிழர் கூட, சமஸ்கிருதம் நமது புராதன மொழி என்றும் வட நாட்டுக்கும் தென்னாட்டுக்கும் கலாச்சாரம் ஒன்றே என்றும் ஒளிவு மறைவு—வெட்கமின்றிக் கூறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இல்லையேல் ஒரு தமிழன், தன்னுடைய தாய் மொழியான தமிழ், சமஸ்கிருதத்தைப்பார்க்கிலும் பழைமையான மொழி, என்பதை மறந்து 'சமஸ்கிருதம் தான் நமது புராதன மொழி' என்று கூறியிருக்க முடியுமா என்பதை எண்ணிப் பாருங்கள்.

இனி, வட நாட்டுக்கும் தென்னாட்டுக்கும் கலாச்சாரம் ஒன்றே என்று கூறும் தோழர் பக்தவத்சலம் அவர்களுக்குக்கலாச்சாரம் என்றால் என்ன என்றே தெரியாதென்று தான் நாம் நிச்சயமாக நினைக்கிறோம்.

தமிழ் நாட்டு மொழி வேறு.
வட நாட்டு மொழி வேறு.

எனவே மொழியைப் பொறுத்த வரையில் வடநாடும் தென்னாடும் கலையில் ஒன்றாக ஒருபோதும் இருக்க முடியாது. இருந்ததுமில்லை.

உண்ணும் உணவிலும், உடுக்கும் உடையிலும் வடநாடும் தென்னாடும் ஒரே விதமானமுறையைக் கையாளுவதில்லை.

நகை அணிவதிலும் வடநாட்டுக்கு ஒருமுறை, தமிழ்நாட்டுக்கு இன்னொரு முறை.

இசைக்கலை, நடனக் கலை, தென்னாட்டுக்கு வேறு; வட நாட்டுக்கு வேறு.

பழக்க வழக்கங்கள் தென்னாட்டுக்கும் வடநாட்டுக்கும் வெவ்வேறு.

வடநாட்டான் ரொட்டி சாப்பிடுகிறான். தென்னாட்டான் சோறு சாப்பிடுகிறான்.

அதிகம் கூறுவானேன். தோற்றத்திலேயே வெவ்வேறு தன்மைகளையும் பண்புகளையும் தனித்தனி பிரித்தறியக் கூடிய விதத்தில் வடநாட்டவரும் தென்னாட்டவரும் கொண்டுள்ளனர். ஒரு வடநாட்டவனையும் ஒரு தென்னாட்டவனையும் ஒருங்கே நிற்க வைத்துப் பார்த்தால், 'வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் கலாச்சாரம் ஒன்றே என்றுகூறும் தோழர் பக்தவத்சலர்கூட 'அவன் வடநாட்டான்—இவன் தென்னாட்டான்' என்று கண்டுபிடித்து கூறக் கூடிய அளவுக்கு இருநாட்டவரும் தனித்தனி தங்கள் தோற்றத்தினாலேயே வேறு வேறு கலாச்சாரத்தைக் கொண்டவர்கள் என்பதை விளக்கி விடுவர். தோழர் பக்தவத்சலம் போன்றவர்கள் கலையைப் பற்றிய பாலபாடத்தையாவது கற்றிருக்க வேண்டும். இல்லையேல் அவர்களுக்கு ஆரியக்கலையும் தமிழ்க்கலையும் ஒன்றாக வேதான் தெரியும். காரணம், அவர்கள் தமிழ்க்கலையைவிரும்பாது ஆரிய கலையையே பெரிதும் விரும்பி அதனோடு அளவளாவி அதற்கே அடிமையாய் இருக்கும் நிலைமையை உண்டாக்கிக் கொண்டிருப்பதுதான்.

இப்படிப்பட்டவர்களுக்கு அறிவு சான்றபெரியோர்களால் எழுதிவைக்கப்பட்டிருக்கும் கலைஆராய்ச்சி நூல்களைப் படித்து அவற்றில்கூறப்பட்டிருக்கும் கலை வேறுபாடுகளையும் அவ்வேறுபாடுகள் எதற்காக உண்டாக்கப்பட்டன என்பதையும் அறிந்து கொள்ளும்படி சொன்னால் அது அவர்களால் அறிந்து கொள்ளமுடியாத காரியமாகும். ஏனென்றால் இன்றைய அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களில் பெரும்பாலோர் அறிவையும் அனுபவத்தையும் துணைக்கழைத்து அரசியல்நடத்த அறியாதவர்கள்—விரும்பாதவர்கள்.

எனவேதான் அமைச்சரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு விளக்

(5-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 29—8—48 [ஞாயிறு

# அடக்குமுறையை வரவேற்கிறோம்

✻

சென்னை அரசாங்கம், தனது 'ஜனநாயக' ஆட்சி முறையின் பல கட்டங்களைக் கடந்து, இப்போது திராவிடர் கழகத்தார் மீதும் தனது 'ஜனநாயக' ஆட்சியைச் செலுத்தத் தொடங்கிவிட்டது.

22—8—48-ல் சென்னையில் பெரியார் இல்லத்தில் திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அங்கு கூடியிருந்த அனைவரையும் போலீசார் கைது செய்தனர். இது, நம்மால் எதிர்பார்க்கப்பட்ட ஒரு சாதாரண நிகழ்ச்சிதான் என்ற போதிலும், இந்தி எதிர்ப்புச் சம்பந்தமாக இனி மேற்கொண்டு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதை முடிவு செய்வதற்காக மாகாண முழுவதிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளையும் தலைவரையும் எதிர்பாராத விதமாகக் கைதுசெய்ததானது, சென்னை அரசாங்கத்தின் 'ஜனநாயக' ஆட்சிமுறை எப்படிப்பட்டதென்பதைப் பொது மக்கள் உணரும்படி செய்துவிட்டது.

காங்கிரசின் பேரால் உண்டாக்கப்பட்ட இந்தப் புதுமுறையான 'ஜனநாயக' ஆட்சிமுறை, பொது மக்களின் நியாயமான உரிமைகளைப்பறிப்பதற்கே உரிமைப் படுத்தப்படும் என்பதைச் சென்னை அரசாங்கம் செயல்முறையில் செய்து காட்டிவிட்டது.

ஆனால் இத்தகைய ஜனநாயக ஆட்சி முறை, ஆளவந்தவர்களை அவர்களின் பீடத்தினின்றும் அகற்றுவதற்கே துணை செய்யுமன்றி, இதனால் அவதிப்படுவோரை ஒன்றும் செய்துவிட முடியாதென்பது வரலாறுகள் கற்பிக்கும் பாடம். இதனை இன்றைய ஆணவ ஆட்சியாளர் உணரவில்லையென்றாலும், காலம், அவர்களுக்கு அதனை விரைவில் உணர்த்திவிடும் என்பதை மட்டும் அவர்கள் மறந்துவிடக் கூடாது.

அடக்குமுறையை அரசாங்கம் ஆயுதமாகக்கொண்டுள்ளது. ஆனால் அடக்குமுறைக்குக் காரணமாயுள்ள உரிமை வேட்கை மேலும் அதிகமாக—விரைவாக நாடெங்கும் பரவிவிட்டதென்பதை, தலைவர்களைக் கைது செய்த நாளிலிருந்து நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கொண்டு சர்க்கார் நன்கு அறிந்து கொள்ள முடியும். சர்க்கார், தாங்கள் செய்யும் அட்டூழியங்களை மறைப்பதற்காக வைத்துக்கொண்டிருக்கும் பத்திரிகைத் திரைகளையும் கிழித்தெறியும் அளவுக்குப் பொதுமக்களின் உரிமைக் கிளர்ச்சியின் வேகம் நாட்டில் பரவி, நயவஞ்சகத்தால் நாடாள்வோரின் ஆணவம் முறியடிக்கப்படும் என்பது மட்டும் உறுதி.

எனவே, அடக்குமுறையை வரவேற்கிறோம்; அது, ஆளவந்தார்களின் ஆணவ பலத்தை அளந்து காட்டும் கருவியாக அமைந்திருப்பதைக் கண்டு களிப்படைகிறோம். ஆனால் ஒன்று கூறுகிறோம். இந்த அடக்குமுறை, எங்களின் நியாயமான போராட்டத்தை நடத்துவதற்கு இடையூறாகச் சலிப்பையோ—சஞ்சலத்தையோ — சோர்வையோ தந்துவிடாது. சோர்ந்து கிடக்கும் சிலரையும் இந்த அடக்குமுறை எழுப்பிவிடும் — எடுத்துக் கொண்டுள்ள பணிக்கு விரைவில் வெற்றிமாலை சூட்டும் என்பதை நாம் நன்கறிவோமாதலால் அடக்குமுறையை அறைகூவி அழைத்து வரவேற்கிறோம்.

ஆட்சிப்பீடத்தில் இன்று அமர்ந்துள்ளவர்களே அன்று கூறினர்—அதாவது வெள்ளையன் இந்த நாட்டைவிட்டு வெளியேறு முன்பு கூறினர், அடக்கு முறையை அள்ளி வீசுகிறான் அன்னியன். ஆகவே! அவனை உடனே நாட்டைவிட்டு நாம் அகற்றவேண்டும். இல்லாவிடில் நம் அல்லல்கள் அகலாது என்று ஆயிரமாயிரம் மேடைகளில் அண்டமதிரக் கூவினர்—அவனைக் கண்டித்தனர். இத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை காங்கிரஸ் கனவான்கள். நம் ஆட்சியாய் இருந்தால் எழுத்துரிமை, பேச்சுரிமை முதலிய எந்த உரிமையும் பறிபோகாததுமட்டுமல்ல — நாட்டு மக்களுக்குத் தேவையானதை, அவசியமானதை ஏற்படுத்திக்கொள்ள முடியும், ஆனந்தத்தோடு வாழ முடியும் என்றனர். ஆனால், அதேதோழர்கள், தாங்கள் கூறியதை எல்லாம்—கூறியதை எல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டு, வெள்ளைக்காரனைவிட வேகமாக ஓடுகிறார்கள் அடக்குமுறைச்சட்டங்களைவீசுவதன்மூலம். இதனால் ஒன்று நன்கு புலப்படுகின்றது, இப்படிப்பட்ட அடக்குமுறையை வீசி அனேக காலம் இவர்கள் ஆட்சியில் அமர்ந்திருக்க முடியாது, அதி சீக்கிரத்திலேயே அவ்வாசனத்திலிருந்து அகற்றப்படுவார்கள் என்பது.

நாட்டிலே நல்லாட்சி நிலவவேண்டும், நாடு நலமுற வேண்டும் என்பதற்காகவே அல்லும் பகலும் ஓயாது உழைத்துவரும் திராவிடர் கழகத்தை ஆட்சியாளர் அடக்குமுறை கொண்டு அடக்கிவிட எத்தனித்தால், அது தன்னையே அடக்குமுறையால் சாடிக்கொள்கிறது என்றே பொருள். சர்க்கார் தங்கள் மனதை நன்றாகத் திறந்து காட்டியிருக்கிறது, எதேச்சாதிகாரம்தான் நடத்துவோம், ஜனநாயக ஆட்சி நடத்தமாட்டோமென்று. அதற்காகச் சர்க்காரைப் பாராட்டுகிறோம்; அடக்குமுறையை வரவேற்கிறோம்.

✻

### காஞ்சிபுரத்தில்

23—8—48-ல் காஞ்சிபுரத்தில் சென்னை சர்க்கார் திராவிடர் கழகத் தலைவர்களைச் சிறையடுத்தியதைக் கண்டிக்கும் முறையில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. அன்று, காஞ்சிபுரத்திலுள்ள ஆண்டர்சன் உயர்நிலைப்பள்ளி, பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சோமசுந்தர கன்யா வித்யாலயம், வன்னியர் சங்கப் பள்ளிக்கூடங்களும், ஆடிசன் பேட்டையிலுள்ள இரண்டொரு காங்கிரசன்பர்களின் கடைகள் நீங்கலாக எல்லாக் கடைகளும் மூடப்பட்டன. ஊர்வலமும் பொதுக் கூட்டமும் அமைதியாக நடைபெற்றது.

### இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்குத் தடை

மதுரையில் இம்மாதக் கடைசியில் நடைபெற இருந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்தக்கூடாதென்று மாகாண மாஜிஸ்ரேட் 144 தடை உத்தரவு போட்டிருக்கிறார். தடை உத்தரவு இரண்டு வாரம் அமுலில் இருக்குமாம்.

## பாலபாடம் அறியாத

3-ம் பக்கத் தொடர்ச்சி

கத்தை இங்கு எடுத்துக்காட்டி, ஆரியக்கலைவேறு தமிழ்க்கலைவேறு என்பதை உணரும்படி செய்ய விரும்புகிறோம். நாம் இங்கு எடுத்துக் காட்டும் விளக்கம், 1948-வது ஆண்டுக்கு 5-வது வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு பாடமாக வைக்கப்பட்டிருக்கும் "இந்து தேச சரித்திரம்" என்னும் பாட புத்தகத்தில் இருந்து எடுத்துக் காட்டுவதாகும்.

"திராவிடர்கள் உறுதியான உடல் அமைந்தவர்கள். சத்தியத்திலும் வீரத்திலும் அவர்கள் தலை சிறந்தவர்கள். அவர்கள் மலையிலும் காட்டிலும் முதலில் வாழ்ந்து பின்பு சமநிலங்களிலும் கடல் ஓரங்களிலும் பரவினதாகத் தெரிகிறது. சமவெளிகளில் வந்த பிறகு அவர்களுக்குப் பயிர்த்தொழில் சிறந்த வேலையாயிற்று.

தமிழில் சங்க நூல்கள் என்று ஒருவகை நூல்கள் இருக்கின்றன. அவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழரின் நாகரிகத்தைப்பற்றிக் கூறுகின்றன. சங்க காலத்தில் பல அரசர்கள் இருந்தனர். சிறந்த நகரங்களும், கோட்டைகளும், ஆறுகளும், கால்வாய்களும் அப்பொழுது இருந்தன. சங்க காலத்தவர்களும், பூர்வீக திராவிடர்களைப் போலவே போர் செய்வதில் மிக்க விருப்பம் காட்டிவந்தனர். போரில் இறந்த வீரர்களின் பொருட்டு அவர்கள் கற்களை நிறுத்தி அவற்றிற்குப்பூசை இட்டனர்.

திராவிடர்கள் பிறகு தம் நாட்டுள் புகுந்த ஆரியர் என்ற வகுப்பினரோடு சேர்ந்து மன ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர், என்றாலும் திராவிடர்கள் தம் தனிச் சிறப்பை ஒருநாளும் இழக்கவில்லை."

இவை திராவிடர்களைப் பற்றி அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் உண்மைகள். இது மட்டுமல்ல, அந்தப் புத்தகத்தின் 30 பக்கத்தில் மேலும் திராவிடர்களின் தனிச் சிறப்பைப் பற்றிய உண்மைகள் கூறப்பட்டிருக்கின்றன. அதனையும் இங்கு வெளியிடுகிறோம்.

"இத்தென்னிந்தியாவின் வரலாறு தனிமையானது. இதன் நாகரிகமும் சரித்திரப் போக்கும் தனிமையானவை.

கிருஸ்து பிறப்பதற்கு வெகு காலம் முன்பே தமிழகம் சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. அசோகர், சமுத்திரகுப்தர் முதலிய வடநாட்டுச் சக்ரவர்த்திகள் கூட அதனைத் தம் வசப்படுத்தக் கூடாமற் போயினர்.

பெரும்பாலோர் சிவன், விஷ்ணு ஆகிய இந்து மதக் கடவுள்களை வணங்கினார்கள். பலர் பௌத்தம், ஜைனம் முதலிய மதங்களையும் பின்பற்றினர். தெய்வ நூல்களில் தேர்ந்த பெரியோர்கள் நாடு எங்கும் பரவி மதக் கொள்கைகளை பரப்பி வந்தனர்."

என்றும் அப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. இனி ஆரியர்களைப் பற்றியும் அந்தப்புத்தகத்தில் விளக்கம் தரப்பட்டுள்ளது. அதனையும் இங்கு வெளியிடுகிறோம்.

"ஆரியர்கள் பரந்த நெற்றியை உடையவர்கள். அவர்கள் நீண்ட நாசியையும் பெற்றிருந்தனர். அவர்கள் பற்கள் உள் அடங்கி இருக்கும். திராவிடர்களின் நெற்றியும், மூக்கும் ஆரியர்களின் நெற்றியையும் மூக்கையும்விட அகன்று இருக்கும். திராவிடர்களின் நிறம் கருமையானது. திராவிடர்களைவிட ஆரியர்கள் உயரமாய் இருந்தார்கள். இந்தியாவில் நுழைந்தபோது ஆரியர்கள் ஆடுமாடுகளையும், குதிரைகளையும் மேய்த்து வந்தனர். அவர்கள் சமஸ்கிருதம் என்னும் மொழியை வழங்கி வந்தனர். ஆரியர்கள் ஆதிமுதலிலேயே சிறந்த மதக் கருத்துக்களைக் கொண்டிருந்தனர். வேதம் என்பது அவர்களின் மதத்திற்கு மூல நூல் ஆகும். அது பிற்காலத்தில் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. அவை, இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் எனப்படும். அவ்வேதமே ஆரியர்களின் பழமையான நூல். அதுவே இந்து மதத்திற்கும்மூலம்

அவர்கள் மாமிசம் உண்டனர். சோமம் என்ற கொடியின் ரசத்தையும் பருகி வந்தனர்.

அவர்களின் நாகரிகம் முதிர முதிர அவர்கள் பல தரும நூல்களையும், இலக்கண நூல்களையும், புராணங்களையும், இதிகாசங்களையும் எழுதினர். இராமாயணம், பாரதம் என்பன இதிகாசங்கள். ஆரியர்கள் வட இந்தியாவில் நுழைந்த போது அங்கே பல ஜனங்கள் இருந்தனர். அவர்களுள் திராவிடர்களும் உண்டு. அவர்களை வென்று சிலரை வேறு இடங்களுக்கு ஓட்டியும், வேறுசிலரைத் தமக்குக் கீழ்ப்படுத்தியும், மற்றும் சிலரோடு சேர்ந்து கொண்டும் ஆரியர்கள் வட இந்தியா முழுமையும் பரவலாயினர். கீழ்படுத்தப்பட்டவர்களை அவர்கள் 'தாஸ்யுக்கள்' என்று அழைத்தனர். திராவிடர்களில் பலர் தென்னாடுகளுக்கு வந்தனர். ஆரியர்களின் பண்டைக் கால வாழ்க்கையைப் பற்றியும், அவர்களின் பழக்க வழக்கங்கள் கொள்கைகள் இவற்றைப் பற்றியும் அறிவதற்கு வேதம் பெரிதும் பயன் படுகிறது. அவர்களின் செல்வம் பெரும்பாலும் ஆடு மாடுகளாகவே இருந்தன."

என்று அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த விளக்கத்தினால்கூட நமது மதிப்பிற்குரிய மராமத்திலாக்கா மந்திரியார், வடநாட்டுக் கலை வேறு, தென்னாட்டுக் கலை வேறு என்பதை உணர முடியாவிட்டால், இதைவிடச் சிறந்த விளக்கம் வேறு நம்மால் எப்படித் தரமுடியுமென்பது நமக்கே புரியவில்லை. என்றாலும் இதற்கொரு வழி இருக்கிறது. நமது மராமத்திலாக்கா மந்திரிக்குப் புதல்வர்கள் இருக்கிறார்களோ இல்லையோ நமக்கு தெரியாது. என்றாலும் அவருக்கு நிறையப் புதல்வர்களும், புதல்வியர்களும் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களில் ஒருவர் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் மாணவனாக இருக்கலாம் என்றும் வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்ட மாணவனுக்கும் அவனது தந்தை மராமத்திலாக்கா மந்திரிக்கும், ஆரியர்—திராவிடர் என்பதுபற்றி உரையாடல் நடந்தால், அது எப்படி இருக்கும் என்பதைக் கீழே விளக்குகிறோம்.

மந்திரி:— வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் கலாச்சாரம் ஒன்றே.

புதல்வன்:— நான் படிக்கும் சரித்திரத்தில் வடநாட்டிற்கு வேறு கலாச்சாரம்; தென்னாட்டிற்கு வேறு

கலாச்சாரம் என்று கூறப்பட்டிருக்கிறதே.

மந்திரி:— நீ படிக்கும் சரித்திரம் எது?

புதல்வன்:— தங்களாலும், தங்கள் சகாக்களான ஏனைய அமைச்சர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட சரித்திரந்தான் எனக்குப் பாடபுத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

மந்திரி:— அந்தப் புத்தகத்திலா இவ்விதம் எழுதப்பட்டிருக்கிறது?

புதல்வன்:— ஆமாம் தந்தையே, இதோ பாருங்கள், "திராவிடர்கள் பிறகு தம் நாட்டின் புகுந்த ஆரியர் என்ற வகுப்பினரோடு சேர்ந்து மன ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர்,

**என்றாலும் திராவிடர்கள் தங்கள் தனிச் சிறப்பை ஒருநாளும் இழக்கவில்லை"**

என்று எழுதப்பட்டிருக்கிறதே!

மந்திரி:— ஆரியர்களும் திராவிடர்களும் சேர்ந்து மனஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர் என்று தானே அதில் கூறப்பட்டிருக்கிறது.

புதல்வன்:— அது மட்டுமல்ல. "என்றாலும் திராவிடர்கள் தங்கள் தனிச் சிறப்பை ஒருநாளும் இழக்கவில்லை" என்று கூறப்பட்டிருக்கிறதே! இதற்கு பொருள் என்ன அப்பா?

மந்திரி:— இதற்கு உன்னுடைய உபாத்தியாயர் என்ன பொருள் சொன்னார்?

புதல்வன்:— வடக்கே இருந்து வந்த ஆரியர்களும், தெற்கே உள்ள திராவிடர்களும் ஒன்றாய் இருந்த போதிலும், திராவிடர்கள் தங்கள் மொழி, கலை, நாகரிகம், பழக்க வழக்கங்கள் ஆகிய தனிச் சிறப்புகளை, ஆரிய மொழி, கலை, நாகரிகங்கள், பழக்க வழக்கங்களுடன் சேரவிடாமல் பாதுகாத்து வந்தனர் என்று எங்கள் உபாத்தியாயர் பொருள் கூறியுள்ளார்.

மந்திரி:— உங்கள் உபாத்தியாயர் தமிழனா, ஐயரா?

புதல்வன்:— ஏன் அப்பா இந்த கேள்வியை நீங்கள் கேட்கிறீர்கள்? நீங்கள்தான் ஆரியர் வேறு திராவிடர் வேறு என்பது கிடையாது என்றீர்களே!

மந்திரி:— ஆரியர் வேறு, திராவிடர் வேறு என்பது இப்போது இல்லை என்றபோதிலும், ஆரியர் வேறு திராவிடர் வேறு என்று பிரித்துக் கூறும் சிலர் இன்னும் இருக்கிறார்கள், அவர்களில் யாரேனும் ஒருவர் உபாத்தியாயராய் இருந்தால் தான் இவ்விதமான விளக்கம் கூறி இருப்பார் என்று எண்ணி இவ்விதம் கேட்டேன்.

புதல்வன்:— எங்கள் சரித்திர ஆசிரியர் ஓர் ஐயர்தான்.

மந்திரி:— ஒரு ஐயரா இவ்விதமான விளக்கம் கூறினார்?

புதல்வன்:— ஐயராய் இருந்தாலும், ஆண்டவனாய் இருந்தாலும் இந்த விளக்கத்தைத்தான் கூற முடியும். ஏனென்றால், இந்த இடத்தில் இதற்கு பொருள் இதுவல்ல வேறு என்று கூறினால் அந்த உபாத்தியாயர் அறிவு வளர்ச்சி அடைந்து வரும் மாணவர்களாகிய எங்களிடம் இருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

மந்திரி:- நீ கூறுவது ஒன்றும் புரியவில்லையே!

புதல்வர்:- உங்களுக்கு எப்படி அப்பா புரியும்? நீங்கள்தான் எங்கள் சரித்திர புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் ஆரிய—திராவிட கலைவேறுபாடுகளைக் கூட தெரிந்துகொள்ள முடியாமல், ஆரியரும் திராவிடரும் ஒன்றாய் விட்டனர் என்று கூறுகிறீர்களே!

மந்திரி:- சரித்திரத்தில் அப்படி இருந்தாலும் நடைமுறையில் ஆரியர் திராவிடர் என்ற வேறுபாடு கிடையாது.

புதல்வன்:- நடைமுறையில் இல்லாததைச் சரித்திரத்தில் எழுதுவார்களா? இதோ பாருங்கள்

"இத்தென்னிந்தியாவின் வரலாறு தனிமையானது. இதன் நாகரிகமும் சரித்திரப் போக்கும் தனிமையானவை"

என்று முன் சொன்னதை நன்கு வலியுறுத்தும் முறையில் விளக்கங் கொடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

மந்திரி:- இப்படியா எழுதப்பட்டிருக்கிறது? உண்மையும் அப்படித்தான் ஒருவேளை இருக்கமுடியும். இல்லாவிட்டால் சரித்திரத்தில் இப்படியெல்லாம் ஒருபோதும் எழுதமாட்டார்கள்.

புதல்வன்:- [illegible] நீங்கள் ஏனப்பா, அன்று, தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் [illegible] ஒன்றுதான் என்று கூறினீர்கள்?

மந்திரி:- அதுவா! அன்று நான் பேசிய இடம், லேடி சிவசாமி ஐயர் பள்ளிக்கூடம். என்னை வரவேற்றவர்களும், அங்கு கூடியிருந்தவர்களும் பெரும்பாலும் பார்ப்பனர்களாய் இருந்ததால், அவர்கள் மனம் நோகப்படாது எனக் கருதி அவ்விதம் பேசிவிட்டேன்.

புதல்வன்:- தனிப்பட்ட சிலரின் மனம் கோணுமலிருக்கவேண்டுமென்பதற்காக, வரலாறு கண்ட முடிவுகளை மறைத்துப் பேசலாமா?

மந்திரி:- இந்தக்காலத்தில் வரலாறுகளை யார் படிக்கிறார்கள்? எங்களைப் போன்ற மந்திரிகள் கூறுவதைத் தான் வரலாறு என்று பாமர மக்கள் கருதுகிறார்கள்—கருதுவார்கள்.

புதல்வன்:- பாமர மக்களென்று தாங்கள் கூறுவது எங்களைப்போன்ற படிக்கும் மாணவர்களையா? அல்லது படிப்பு வாசனையறியாத மக்களையா? அல்லது இருபாலாரையும் சேர்த்தா?

மந்திரி:- எங்களை மந்திரிப் பதவிகளில் அமர்த்தியவர்கள் பெரும்பாலும் படிப்பு வாசனையறியாதவர்கள் தான். தவிரவும் இந்த நாட்டிலே நூற்றுக்கு தொண்ணூறு பேர் படிப்பு வாசனை அறியாதவர்கள் தானே இருக்கிறார்கள்.

புதல்வன்:- அப்படியானால் எங்களைப் போன்ற படிக்கும் மாணவர்கள், இந்தப் படிப்பினால் ஏற்படும் அறிவை எதற்குப் பயன்படுத்துவது? நீங்கள் கூறுவதிலிருந்து படிப்பே மக்களுக்குத் தேவையில்லை என்றல்லவோ பொருள் படுகிறது.

என்று இவ்விதமாகத்தான் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் ஒரு மாணவன் தனக்கு ஏற்படும் ஐயப்பாடுகளை நீக்கிக்கொள்வதற்குரிய கேள்விகளைக் கேட்க முடியும். இதற்குமேல் இன்னும் விரிவாகவும் விளக்கமாகவும், சரித்திரப் புத்தகத்தில் கூறப்படும் உண்மைகளைக் குறித்து அவனால் கேட்க முடியாது. ஐந்தாம் வகுப்பை முடித்துக்கொண்டு, மேல் வகுப்புகளுக்குச்செல்லும் மாணவர்கள் இந்தக் கேள்விகளோடு மட்டும் நின்றுவிடமாட்டார்கள். அவர்கள் ஐந்தாம் வகுப்பில் படித்த சரித்திர உண்மைகளை ஆராய்ந்து அறியும் ஆற்றலை மேல் வகுப்புகளில் படிக்கும்போது தான் பெறுவார்கள். அப்பொழுது அவர்களுக்குப் பலப்பல ஐயப்பாடுகள் தோன்றும். அவர்

கள், ஆரியரும் திராவிடரும் கலை, நாகரிக, பழக்க வழக்கங்களில் வேறுபட்டவர்கள் என்பதோடு மட்டும் தங்கள் ஆராய்ச்சியை நிறுத்திக் கொள்ள மாட்டார்கள். "கிறிஸ்து பிறப்பதற்கு வெகுகாலம் முன்பே தமிழகம் சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. அசோகர், சமுத்திரகுப்தர் முதலிய வடநாட்டுச் சக்கரவர்த்திகள்கூட அதனைத் தம்வசப்படுத்தக் கூடாமற் போயினர்" என்று ஐந்தாம் வகுப்புச்சரித்திரப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதே, அதன் உண்மை என்னவென்று ஆராய்ந்து பார்ப்பார்கள். அந்த ஆராய்ச்சி, அவர்களுக்கு என்ன எண்ணத்தை உண்டாக்கியிருக்கும் என்பதை தோழர் பக்தவத்சலம் அவர்களால் கூட உணர்ந்து கொள்ளாமலிருக்க முடியாது. அந்த அளவுக்கு விளக்கம் அந்த மாணவர்களால் ஏற்படுத்த முடியும். அப்படிப்பட்ட மாணவர்கள் பெரும்பாலோராக இருக்கும் நிலை இந்நாட்டுக்கு ஏற்பட்டுவிட்டால் தோழர் பக்தவத்சலம் போன்ற நபர்களுக்கு மந்திரிப் பதவியல்ல, அதன் வாயற்படியில்கூட கால் வைக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

மேலும், அந்த மாணவர்கள் தங்கள் படிப்பில் உயர உயர, அவர்களுக்கு ஐந்தாம் வகுப்பில் படித்த சரித்திரப் புத்தகத்தில் காணப்படும் உண்மைகள், பல சிறந்த விளக்கங்களைத் தெளிவாக்கிக் கொண்டே போகும். "திராவிடர்களிற் பெரும்பாலோர் சிவன், விஷ்ணு ஆகிய இந்துமதக் கடவுள்களை வணங்கினார்கள்" என்று சொல்லப்பட்டிருந்ததே, அதன் உண்மை என்னவென்பதையும் ஆராய்வார்கள். ஐந்தாம் வகுப்பில் படிக்கும் மாணவனுக்கு அந்த உண்மைகள், உண்மையிலேயே விளக்கம் தந்திருக்க மாட்டாது. ஏனென்றால், அந்தச் சரித்திரத்தை எழுதியவர்கள், அந்தச் சரித்திரத்தைப் படிக்கும் மாணவர்களுக்கு விளங்கக்கூடிய முறையில் எழுதிவைக்கவில்லை. சிவனும்விஷ்ணுவும் திராவிடர்களுடைய கடவுள்கள்தான் என்ற அளவிலதான் அவர்களுடைய அறிவு சென்றிருக்கும். ஆனால், ஐந்தாம் வகுப்பைக்கடந்து சென்ற மாணவர்கள் அந்த அளவோடு நின்றுவிட மாட்டார்கள். "தெய்வநூல்களில் தேர்ந்த பெரியோர்கள், நாடெங்கும் பரவி, மதக் கொள்கைகளைப் பரப்பி வந்தனர்" என்பதனையும், "ஆரியர்கள் ஆதி முதலிலேயே சிறந்த மதக்கருத்துக்களைக் கொண்டிருந்தனர்" என்பதனையும் ஒப்புநோக்கிப் பார்ப்பார்கள். அத்தகைய ஒப்புநோக்குதல், திராவிடர்களுக்கு ஆதியிலேயே கடவுள்வழிபாட்டுமுறை இருந்ததில்லை என்பதையும், ஆரியர்களுக்கே அது உரித்தாய ஒன்றாய் இருந்ததென்பதையும், ஆரியர்களுள் தெய்வநூல்களில் தேர்ந்த பெரியோர்களே தென்னாடெங்கும் பரவி, மதக் கொள்கைகளைப் பரப்பினர் என்பதனையும் எளிதில் உணர்ந்து கொள்வர்.

இதுமட்டுமல்ல, "வேதமென்பது ஆரியர்களின் மதத்திற்கு மூலநூலாகும்; அதுவே இந்துமதத்திற்கு மூலம்." என்று ஐந்தாம் வகுப்புச் சரித்திரத்தில் எழுதப்பட்டிருப்பதையும், "திராவிடர்களிற் பெரும்பாலோர் சிவன்விஷ்ணு ஆகிய இந்துமதக்கடவுள்களை வணங்கினார்கள்" என்பதையும் ஒப்புநோக்கிப் பார்ப்பார்கள். அப்பொழுது, இந்துமதமென்று சொல்லப்படுவது, ஆரியர்களுடைய மதமேயன்றி, திராவிடர்களுடைய மதம் அல்ல என்பதைச் சிறிதளவும் ஐயப்பாடின்றி நன்கு உணர்ந்து கொள்வர்.

மேலும், அந்த மாணவர்கள் தாங்கள் ஐந்தாம் வகுப்பில் படித்த சரித்திரத்தை நினைவுக்குக் கொண்டு வந்து பார்ப்பார்களானால், இன்னும் பல உண்மைகள் அவர்களுக்கு விளங்கும். திராவிட நாகரிகம்வேறு, ஆரிய நாகரிகம்வேறு என்பதற்கு அச்சரித்திரத்திலேயே ஆதாரங்களை அவர்கள் காண்பர். திராவிட நாகரிகத்திற்கு ஆதாரமாக நிற்பவைசங்க நூற்கள் என்பதையும், ஆரிய நாகரிகத்திற்கு ஆதாரமாக நிற்பவை இருக்கு முதலான வேதங்களே என்பதையும் அவர்கள் அறிந்துணர முடியும். அந்தச் சரித்திரப் புத்தகத்திலேயே "தமிழில் சங்கநூல்கள் என்று ஒருவகை நூல்கள் இருக்கின்றன. அவை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த தமிழரின் நாகரிகத்தைப் பற்றிக் கூறுகின்றன" என்று எழுதப்பட்டிருப்பதையும், "ஆரியர்களின் பழக்க வழக்கங்கள் கொள்கைகள், இவற்றைப்பற்றியும் அறிவதற்கு வேதம் பெரிதும் பயன்படுகிறது" என்று எழுதப்பட்டிருப்பதையும் ஒப்பு நோக்கி பார்க்கும் போது, திராவிடர்களின் நாகரிகத்தை விளக்க தனியான தமிழ் நூல்களும், ஆரியர்களின் நாகரிகத்தை விளக்க தனியான சமஸ்கிருத நூல்களும் வெவ்வேறாக இருந்தன என்பதனை உணரவும், அந்த உணர்வு மேலிட்டால், தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் உள்ள கலாச்சார வேறுபாடுகள் தனித்தனியானவை என்பதை அறிந்துகொள்ளும் வாய்ப்பும் ஏற்படும்.

இதுமட்டுமல்ல, திராவிடர்கள் மிகப் பழையகாலத்திலேயே மிகுந்த செல்வத்தோடு வாழ்ந்தனர் என்பதனையும், ஆரியர்களுக்கு அத்தகைய செல்வங்கள் எதுவும் இருந்ததில்லை என்பதையும் அந்த மாணவர்களால் உணரமுடியும். "திராவிடர்களுக்குச்சிறந்த நகரங்களும், கோட்டைகளும், ஆறுகளும், கால்வாய்களும், அப்பொழுதே இருந்தன" என்றும் "ஆரியர்களுக்கு அவர்களின் செல்வம் பெரும்பாலும் ஆமோகோளாகவே இருந்தன" என்றும், அந்தச் சரித்திரப் புத்தகத்திலேயே கூறப்பட்டுள்ளது.

இன்னும் விளக்கமாகக் கூற வேண்டுமானால், வடநாட்டிலிருந்த ஆரியர்கள், அப்பொழுது அங்கிருந்த திராவிடர்களை அடக்கி அடிமைப்படுத்த முனைந்தபோது, அதனை விரும்பாத திராவிடர்கள் தென்னாட்டிற்கு வந்துவிட்டனர் என்றும் அச்சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது. "ஆரியர்கள் வடஇந்தியாவில் நுழைந்தபோது அங்கே பல ஜனங்கள் இருந்தனர். அவர்களுள் திராவிடர்களும் உண்டு. அவர்களை வென்று, சிலரை வேறு இடங்களுக்கு ஓட்டியும், வேறு சிலரை தமக்குக் கீழ்ப்படுத்தியும், மற்றும் சிலரோடு சேர்ந்துகொண்டும், ஆரியர்கள் வடஇந்தியா முழுமையும் பரவலாயினர். கீழ்ப்படுத்தப்பட்டவர்களை அவர்கள் 'தாஸ்யுக்கள்' என்று அழைத்தனர். திராவிடர்களில் பலர் தென்னாட்டிற்கு வந்தனர்" என்றும் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து, அறிவு நிரம்பப்பெற்றமேல் வகுப்பு மாணவர்கள் என்ன முடிவுக்கு வரக்கூடுமென்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள். ஆரியர்களால் விரட்டப்பட்டவர்களோ, கீழ்ப்படுத்தப்பட்டவர்களோ, சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களோ, இத்தென்னாட்டிற்கு வரவில்லை என்பதையும், வடநாட்டு ஆரியர்கள் செய்த கொடுமைகளைச் சகித்துக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் விரும்பாத திராவிடர்கள்தான். அவர்கள் [illegible]

றும் விடுபட்டுத் தென்னாட்டிற்கு வந்து தங்கள் தனிப்பண்பையும், கலாச்சாரத்தையும் பாதுகாத்துக் கொண்டனர் என்பதனையும், அவர்களின் வழி வந்தோரே இன்றுதென்னாட்டில் திராவிடர்கள் என்ற பெயரோடு வாழ்ந்து வருகின்றனர் என்பதனையும், எனவே வடநாட்டுக் கலாச்சாரம் வேறு, தென்னாட்டுக் கலாச்சாரம் வேறு என்பதனையும் ஐயந்திரிபற உணர்வர்.

இப்பொழுது தென்னாட்டில், திராவிடர்களென்று சொல்லிக்கொள்ளாத பார்ப்பனர்களும், அந்தக்காலத்தில் வடநாட்டிலிருந்துவந்ததாகச் சொல்லப்படும் திராவிடர்களைச் சேர்ந்தவர்கள்தானே என்று சிலர் தவறாக எண்ணிவிடக்கூடும். அந்தத்தவறையும் இங்கு திருத்தவேண்டியது நம்முடைய கடமையாகும். திராவிடர்கள் தென்னாட்டில் குடியேறிப் பலகாலம் சென்றபின்னரே, வடநாட்டிலிருந்த ஆரியர்களில் ஒரு சிலர், இத்தென்னாட்டிற்கு வந்து குடியேறினரென்றும் அச்சரித்திரத்திலேயே கூறப்பட்டுள்ளது. இன்றும், அந்த ஒரு சிலர் தங்களை ஆரியர்களென்றே அழைத்துக்கொள்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

எனவே, பாலபாடங் கூடப் படித்தறியாத தோழர் பக்தவத்சலம் போன்றவர்களுக்கும், நாம் மேலே காட்டிய விளக்கங்கள்—தென்னாட்டு வடநாட்டுக் கலாச்சார முறைகள் இவை இவையெனப்புரிந்துகொள்ள முடியுமென்று நம்புகிறோம்.

✲

# அடக்குமுறை ஆரம்பம்

## வெற்றிக்கு வித்தூன்றப்பட்டுவிட்டது

# தலைவர்கள் கைது

—✲—

22—8—48-ல் சென்னையில் தலைவர் பெரியார் அவர்களின் இல்லத்தில் திராவிடர்கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, தலைவர் பெரியார் அவர்களையும், மற்றும் அங்கு கூடியிருந்த நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களையும், இந்தி எதிர்ப்பு நிர்வாகச் செயலாளர்கள் தொண்டர்களையும் போலிசார் கைதுசெய்து சிறையில் வைத்துள்ளனர். சிறைப்படுத்தப்பட்டவர்களின் விபரம் இங்கு தரப்படுகிறது.

பெரியார், வேதாசலம், சி. டி. டி. அரசு, என். வி. நடராஜன், மணியம்மையார், நீலமேகம், அண்ணாத்துரை, ஈ. வி. கே. சம்பத், மணிமொழியார், ராமச்சந்திரன், சி. கணேசன், சேலம் ஜகதீசன், கே. ஜே. குப்புசாமி, அழகரிசாமி, நீடாமங்கலம் ஆறுமுகம், டாக்டர் தர்மாம்பாள், ராமாமிர்தம்மாள், சித்தையன் சேலம், பெத்தாம்பாளையம் பழனிசாமி, சி. வி. எம். அண்ணாமலை, மதியழகன், மோகனராசு (வேலூர்) தங்கராஜ், செழியன், கே. வி. கே. சாமி, வி. குருசாமி, திருநாவுக்கரசு, எ. பி. ஜெனார்த்தனம், கோவிந்தசாமி, முனுசாமி (விருத்தாசலம்) மொய்தீன், பாரங்குசம், இ. வி. ஏ. வள்ளிமுத்து, சோ. சு. அருணாசலம், ஆளவந்தார், லூயிடாமினிக், அய்யாசாமி, ராஜமாணிக்கம், பி. வி. பத்மனாபன், எஸ். குருசாமி, பி. டி. தனபால், ஆர். நடேசன், புலவர் மாணிக்கம், புலவர் கோவிந்தன், டி. பி. முருகேசன் (தஞ்) பி. தங்கவேலு (தஞ்) பொன்னுசாமி (தஞ்) குருநாதன், எஸ். ராஜகோபால் (தஞ்) சின்னத்துரை (கோ) எம். ரத்தினம் (தூத்து) எஸ். நடராசன் (தூத்து) தங்கப்பழம் (தூத்து) சோ. கோ. முருகையன் (செ) கண்ணம்மாள், சீதாபதி, பி. முருகேசன் (புலியூர்) கே. பாலையா (புலியூர்) எஸ். மயில்வாகனம், இரா. ராஜகோபால், சீதாராமன், சங்கரய்யா, வி. சித்தையன், ஜே. கே. வேலாசாமி, பி. எஸ். கிருஷ்ணன், எம். பி. நடராஜன், பி. மாணிக்கம், பி. கே. என். சக்ரவர்த்தி, பி. ஜீ. ஏழுமலை, ஆர். ஷண்முகம், எஸ். வெங்கட்ராஜ், எ. முத்துக்குமாரசாமி, ராஜு (காதம்) முத்துக்குமாரசாமி (பெத்து) ஆர். வெங்கட்ராமன் (நாடார்) சி. கோவிந்தராஜன் (வாணி) பிரமன் (நாட்) கே. சுப்பையா (வண்) பி. கே. ராமமூர்த்தி (பெண்) சுப்பிரமணி (சென்) வி. தாண்டவன், பி. ஜி. சம்பந்தம் (பொறை) தியாகராஜன் (பொறை) ஏ. எஸ். ஷண்முகம் (திருப்பூர்) டி. கே. கோவிந்தசாமி, என். கே. கணபதி (காஞ்சி) ஜி என். சாமி (தாராசுரம்) ஜி. பி. சோமசுந்தரம். வானமாமலை (திருச்சி).

### திண்டுக்கல்லில் கைது

22-8-48-ல் திண்டுக்கல் காங்கிரஸ் மாநாட்டுக்குப் போயிருந்த ஸ்தல ஸ்தாபன மந்திரி தோழர் சந்திரமௌளி அவர்களைப் பகிஷ்கரிக்கும் முறையில் "இந்தி ஒழிக" "தமிழ் வாழ்க" என்று கூறிய ஒன்பது பேரைப் போலீசார் கைது செய்தனர்.

### திருச்சியில் கைது

திருச்சியில் பதினொன்று சிறுவர்கள் இந்தி எதிர்ப்பு ஒலிகளைக் கிளப்பியதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி 57 பேருக்குத் தண்டனை

23-8-48 மாலை கவர்னர் ஜெனரல் கார்ப்பரேஷன் ஸ்டேடியத்துக்கு வந்தபோது கருப்புக்கொடி பிடித்துக் கவர்னர்ஜெனரலைப் பகிஷ்கரிக்கும் அறிகுறி காட்டியதற்காகச் சென்னைத் தோழர்கள் ஐம்பத்தேழு பேருக்கு ஒரு வாரச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

### சென்னையில்

24—8—48-ல் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இருவர் 'இந்தி ஒழிக' 'தமிழ் வாழ்க' என்று கூறியதற்காக இருவருக்கும் ரூபா பதினைந்து வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

———

Edited Printed & Puplished by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.